
# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



மாசி - 2020

## காற்றுவெளி

### கலை இலக்கிய இதழ்

*மாசி - 2020*

*ஆசிரியர் : சோபா*

*வடிவமைப்பு : நெகிழன்,*
*7904748374*

*படைப்புகள் அனுப்ப :*



R.Mahendran,

34 Redriffe Road, Plaistow, London, e13 0JX, UK

*மின்னஞ்சல் :*

Mullaiamuthan16@gmail.com



*நன்றி : இணையம்*



*படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.*


# வணக்கம்,

காற்றுவெளி கலை இலக்கிய இதழின் (2020) மாசி இதழ் தங்களின் பார்வைக்கு வருகிறது.பல கனவுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்விதழ் படைப்பாளர்களின் ஒத்துழைப்பினால் இன்னமும் தொடர்ந்துவருகின்றமை மகிழ்வைத் தந்தாலும் இன்னும் பலரைச் சென்றடையவில்லை என்பதும் கவனத்தில் கொண்டுள்ளோம். எனினும் சிற்றிதழுக்கான கஷ்டங்களை பலரும் புரிந்திருப்பார்கள் என்றே நினைக்கிறோம்.அச்சில் வந்து கொண்டிருந்த போது வாசகர்களிடமிருந்து அல்லது விளம்பரதாரரிடமிருந்து நாம் எதிர்பார்த்த சந்தா அல்லது விளம்பரங்கள் கிடைக்கவில்லை எனினும் தொடர்ந்து வெளிவருகின்ற வகையில் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது என்பதையும் புரிந்து கொள்வீர்கள். இந்த இக்கட்டில் தொகுப்புக்களின் முயற்சியும் ஒத்திவைக்கப்பட்டுக்கொண்டே வருகிறது.

சிற்றிதழாளர்கள் தொடர்பு கொள்ளுங்கள். புதிய ஆண்டிலாவது ஆரோக்கியமான நட்பை வளர்ப்போம்.

உங்களின் நூலின் ஒரு பிரதியை அனுப்புங்கள். காற்றுவெளி இதழில் அறிமுகம் செய்வோம்.

உலக அரசியலின் மாற்றங்கள் தனிநபர் வாழ்க்கையிலும் மாற்றங்களை ஏற்படுத்தவே செய்யும்.

சர்வ வல்லமையுள்ள நாடுகள் இனங்களுக்கு இடையேயான நல்ல புரிதல்களை ஏற்படுத்த முனையவேண்டும். மீண்டும்சந்திப்போம்.

நட்புடன்,
சோபா

முனைவர் நா.நளினிதேவி

# பாரதிக்குள் மனிதனும், கவிஞனும்



மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இன்னலும் இன்பமும் இயற்கை. இன்னல் இல்லையெனில் இம்மலர் தலை உலகின் இயக்கம், மரப்பாவை ஆகிவிடும். இன்னல்களுக்கு இடையேயான இன்பத்தேடல்தான் வாழ்க்கை. இத்தேடதல் இல்லையெனில் இன்பத்தின் இனிமையைத் துய்த்து உணர இயலாது. இன்னல்களையும், இடுக்கண்களையும் சாதாரண மக்கள் கண்ணீரிலும், கவலையிலும் கரைக்க, அவை பேச்சு, மூச்சுமாய்க் காற்றோடு கலந்து விடுகின்றன. ஆனால், கவிஞர்களோ, அவற்றைக் காலத்தை வென்று நிற்கும் கவிதைகளாக்குகின்றனர். இன்பியல் கவிதைகளை விடவும், ஒன்பியல் கவிதைகளே, சுவையும் ஈர்ப்பும் பெற்று விளங்குவது கண்கூடு! கவிஞர்தம் இன்னல் இடுக்கண்களை மற்றவுருக்கே இன்பமும் இனுமையும் தரவல்லதாக மாற்றும் ஆற்றல் பெற்றுள்ளனர். அடுத்தவரின் கண்ணீரையும், கவலையையும் கண்டு மகிழ்வது அடுக்குமோ என்ற வினாவிற்குக் கவிதை உலகில் இடம் இல்லை! எனினும் அவரின்படைப்பாற்றலில் மயங்கிக் கவிதைச் சுவையில் தோய்ந்து மகிழும்உள்ளம் அக்கவிதைகளின் களத்தையும், காரணத்தையும் உணரும்போது, அவர்கள்பால் இரக்கம், கொள்ளத் தவறுவதில்லை!இந்த இரக்கம்கவிஞன் மேலுள்ள மதிப்பையும், விருப்பையும் மிகுதியாக்குகிறன்றன. தம்மை வாட்டைவதைக்கும் கவலை நெருப்பில் கவிதை குஞ்சுகளைப் பொரிக்கும் கவிஞன், மனிதனாயினும் அவனை விட பன்மடங்கு

உயர்ந்தவனாகின்றான். இத்தகைய கவிஞருள் ஒருவனே. பாட்டுத் திறத்தால் கவிதை உலகை மாற்றி அமைத்த புரட்சிக் கவி பாரதி. ஒருவருக்கு நோயாகும் துன்ப துயரங்கள் மற்றவருக்கு மருந்தாவது கவிதையுலகின் தனிச்சிறப்பு!

அடிமை இந்தியாவில்விடுதலை வேட்கையுடன் ஒவ்வொரு நாளும் புதிதாய்ப் பிறந்து உலகியல் கவலைகளை மறக்க முயன்ற பாரதியின் வாழ்க்கையில் மகிழ்ச்சி சிறிதாகவும், மிக அரிதாகவுமே இருந்துள்ளது. உடன் பிறந்தே கொல்லும் நோயான கவலைக்குப் பல காரணங்கள்! பாரதியின்கவலைக்கு வறுமையே பெருங்காரணமாக இருந்ததை அவரின் பாடல்களை புலப்படுத்துகின்றன.

வள்ளுவனை வழிமொழிவது போல் பொருளிலார்கினமில்லை, துணையிலை; பொழுதெல்லாம் இடர் வெள்ளம் வந்தெற்றுமால், பொருளாலாள் பொருள் செய்தல் முதற்கடன் என்று பாடும் மனிதன் பாரதி, 'தந்தை போயினன் பாழ்மிடி சூழ்ந்தது, தாரை மீதினில் அஞ்சல் என்பார் இலர்; சிந்தையில் தெளிவு இல்லை; உடலில் திறனுமில்லை; உரன் உளத்து இல்லையால், மடைமைக் கல்வியில் மண்ணும் பயனிலை;எந்த மார்க்கமும் தோற்றிலது என்செய்கேன்?' என் பிறந்தனன் இத்துயர் நாட்டிலே' எனக் கவிஞனாய்க் கலங்கிய நிலை இறுதி வரை மாறவில்லை என்பதே நெஞ்சை வருத்தும் உண்மை.

அகத்தில் மிடிமை, புறத்தில் அடிமை எனினும் சற்றும் மடுமையுறாது, 'மிடிப் பாம்பு கடித்த விஷம் அகன்றே செல்வங்கள் வந்து மகிழ்ச்சி விளைந்திட' மனதாரப் பாடுகின்றான் பாடி இறையருள் வேண்டி உருகுகின்றார். நமக்குத் தொழில் கவிதை;நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல்; இவற்றுடன் சுடர்தரு மதியொடுதுயர் இன்றி வாழும் நோக்கம் பெறப் பொங்குதல் போக்கிப் பொறை எனக்கு ஈவாய் என மிடியின் கவலையால் எளிய மனிதர்போல் வீணாகிப் போய்விடாமல், வறுமை எனும் விதையை மதியால் வெல்லக் கவிதைகள் புனைகின்றான். மொய்க்கும் கவலைப் பிணி போக்கி. எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி, உதலை இரும்புக்கு இணையாக்கிப் பொங்கும் கலியைக் கொல்லும் கவியாகியுள்ளான். கவலையால் உடலும், உள்ளமும் தாக்கமுற்றால் உலகில் வறிதே உண்டு, உறங்கி வாழ்வதில் என்ன பயன் என்று ஏங்குகின்றான்.

நெருப்பினுள் துஞ்சுவதை வெகு எளிதாக்கிவிடும் வல்லமை படைத்த நல்குரவு, கொடிதினும் கொடிது என்பதை வள்ளவரைத் தவிர வேறு யாரால் விளக்க முடியும்? பாரதியைத் தவிர வேறு யாரால் நயம்பட, மறைமுகமாகப் பாட இயலும்? பொருள் அல்லவரையும் பொருளாகச் செய்யும் பொருளின்மை தன்னைக் கசக்கிப் பிழிந்த வாழ்வியல் உண்மைகளைக் கூட அவலச் சுவை தெறிக்கும் தோத்திரப்பாடல்களாய் வளமுறப் பாடியுள்ளார். நல்குரவால் படும் துன்பங்களை விடவும், சாதாரண மனிதன் போல் அதனால் வீழ்ந்து விடுவோமோ எனப்பெரும் அச்சம் கொண்டிருப்பதைக் கவிஞன் பாரதி பல இடங்களில் பல வகையில் வெளிப்படுத்தியுள்ளான். நல்குரவு எனும் இடும்பையில்பல்குரைத்துன்பங்கள் சென்றுபட்டுத் தொல்வரவையும்

தோலையும் தொகையாகக் கெடுக்கும் என்பதை உணர்ந்த மனிதன் பாரதி. அத்தகைய வறுமையைக் களைய அவன் படாத பாடுபட்டதை அவனின் கவிதைச் சொற்கள் புலப்படுத்துகின்றனர்.

இனி வந்த சொற்கள் பிறந்து, சோர்வு தரும் வறுமையின் விளைவை நன்கு உணர்ந்தவன். ஆகையால் பொய்க்கும் கவலைப் பகை போக்கிப் போதும் இவ்வறுமை எலாம் எந்தப் போதிலும், சிறுமையின் புகையினிலே வேதனைப்பட்டு மனமும், உயர் வேதமும் வெறுப்புறச் சோர் மதியும் வாதனை பொறுக்கவில்லை என உள்ளம் கசிந்து உருகிச் செல்வத்துக்குக் கடவுளாம்திருமகளை வேண்டிக் கரைகின்றான். வறுமையால் வளங்கள் எவையும் இல்லாமல் போவதையும், வறண்டு போன வாழ்வே இயல்பாபவதையும், இதனால் நேரும் அகம், புறம் சார்ந்த பல்வகை இன்னல்களையும் எதிர் கொண்டமனிதனைப் பாரதி அவை அனைத்தையும் தம் கவிதையாற்றலால் வென்று விடத் துடிக்கின்றான். 'வீழ்கலிக் கொடு நோய்தான் வையம் மீதினில் வறுமை ஓர் கொடுமை அன்றோ'

கவலைப்படுவதால் பயன் ஒன்றும் இல்லை; கவலைகள் மிகுதியானால் உள்ளத்தில் சிறுமை தோன்றும், உடல் உறுதி குறையும், உடலின் உறுதி குறைந்தால் ..? சொல்லவும் வேண்டுமோ என்று அஞ்சும் மனிதன் பாரதி,மடைமை நெஞ்சமே! கவலைப்படுதலே படு நரகமம்மா! கவலையற்று இருத்தலே முக்தி! 'தலையில் இடி வீழ்ந்தாலும் கவலை இன்றித் தீது நிகழினும் நமக்கு ஏன் என்று இருந்து பண்டைச் சிறுமைகள் போக்கி, என் நாவில் பழுத்த சுவை உனக்கே என் ஆவியும் உள்ளமும் தந்தேன் மனக்கேதம் யாவினையும் ஆற்றி எனக் கவிஞனாய்க் கரைந்து மனக்கலக்கம் மாற்றுகின்றான். உலகியலில் உழலும் மனிதர்கள் போன்றே மனம் வெறுத்து இறைவனை வழிபடுவதையும் நிறுத்தியிருப்பான் போலும்! பொருள் இல்லாப் புற வெறுமை அகத்தையும் வறுமையாக்கி விட்டமையை 'மாதமொர் நன்காய் நீர் - அன்பு வறுமையால் என்னை வீழ்த்திவீட்டீர்' எனக் கவிஞனாய்க் கலங்குகின்றான்.

'காணிநிலம் வேண்டும்' என்று பெருவிருப்புடன் பாடும் பாவலன் பாரதிக்குள்' ஆடுகளும், மாடுகளும் அழகுடைய பரியும், வீடுகளும் நெடுநிலம் விரைவினில் தருவாய்' என்று இறைஞ்சும் மனிதனைக் காண்கிறோம். வறுமை தரும் கவலைகள் போக்கிட இறையருளை வேண்டுதலும், பற்றற்று இருப்பதுமே உற்றவழ்கள் என உய்த்து உணரும்போது முன்னதில் மனிதனும் பின்னதில் கவிஞனுமாய் உறைந்துள்ளாறன். உடன் உறையும் உற்ற உறவுகளால் உறுதுணை கிடைக்காத வழி, 'ஆதாரம் உன்னை அல்லால் ஆர் எமக்குப் பாரினிலே ஏதாயினும் வழி நீ சொல்வாய்' எனத்திருமகளையும், 'வேல் முருகன் காலைப் பணிய்தால் கவலை போம்'; பத்தியினாற் பாடிப்பலகாலும் முத்திநிலை காண்போம் அதனால் கவலைப் பிணி தீர்ந்து பூண்போம் அமரப்பொறி' எனப் பிற கடவுளரையும் பாடிப் பரவுகின்றான்.

இறையருளும் இல்லாமற் போன நிலையில், தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை என்றால், இந்த சகத்தினை அழித்திடுவோம் எனப்பொங்கி எழுந்தாலும் பற்றற்ற

நிலையே உற்ற வழி என மனதையும் தன்னுடன் ஒத்துழைக்க வற்புறுத்தி வேண்டுகின்றான். கவலைகளைக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுதலே. அவற்றின் தாக்கத்திலிருந்து மீளும் வழி என்று ஒதுங்கும் கவிஞனைக் கண்டு உள்ளம் சுமை தாங்காது நோகின்றது அல்லவா? முண்டாசும், கனமான மேலாடையும் (கோட்டு) மெலிந்து நலிந்த தோற்றத்தை மறைத்து நினைபதைப் போன்றே அவனின் கவிதைகள் நொந்து, புண்ணாகிக் குருதி கசியும் உள்ளத்தைப் போர்த்தியுள்ளன.'

விரும்பியது கிடைக்கப் பெறாமல் உழலும் மனதை அடக்கினார் கவலைகளிலிருந்து மீளலாம் எனப் 'பேயாப் உழலும் சிறுமனமே! பேணாய் என் சொல்; இன்று முதல் நீயாய் ஒன்றும் நாடாதே நின்று தலைவன் யானே காண் உரைத்தேன் அங்கு உய்தியால்' எனப்பாடும் மனிதம் பாரதியின் மனக்கவலை சொல்லும் தரத்ததோ? 'பொல்லாப் புழுவினைக் கொல்ல நினைத்தபின் புத்தி மயக்கம் உண்டோ?எத்தனை கோடி இடர் வந்த சூழினும் எண்ணம் சிறிதும் உண்டோ?, ஆன்ம ஒளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க்கு அச்சமும் உண்டோ' எனப் பலவாறு மனதைத் தேற்றிக் கொண்டு அமைதி நோக்கி ஆற்றுப்படுத்துகிறான். எனினும் ஒத்துழைக்க மறுக்கும் மனப்பெண்ணுக்கு மகிழ்ச்சி தரும்வகையில் ஆசை காட்டுகின்றான். 'இத்தனை நாள் போல் இனியும் நின் இன்பம் விரும்புவன்; நின்னை மேம்படுத்திடவே முயற்சிகள் புரிவேன்; முத்தியும் தேடுவேன்' எனப் பாடுகிறார்.

'கொன்று அழிக்கும் குழியில் வீழ்ந்து குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா என அறிவுறுத்தும் கவிஞன், கவலைகளை வெல்லும் திறனில் தோல்விறுள்ள மனிதனாய்த் தன்நெஞ்சை நோக்கி, 'எதற்கும் இனி உளைவதிலே பயன் ஒன்றில்லை; பின்னையொரு கவலையும் இங்கில்லை; நாளும் பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்' எனச் சிட்டுக் குருவியைப் போல விட்டு விடுதலை ஆகி நிற்க வேண்டுகிறான். இவ்வாறு பாரதிக்குள், மனிதனும் கவிஞனும் இடைவிடாது போராடிக் கொண்டுள்ளனர். மனிதனைக் கவிஞன் வென்று விடத் துடிக்கின்றான். மனிதனுக்கு உலகமே துணை! கவிஞனுக்குக் கனவு மட்டுமே! இருப்பினும் கவலைகள் மனிதன் பாரதியை அரித்தெடுக்க, அருத்தெடுக்கக் கவிஞன் பாரதியின் கவிதைகளில் ஆற்றல் ஆற்றவங்கரை ஊற்றாய் ஊறிப் பொங்குகின்றது.

தீக்குள் விரலை வைத்து, அக்கினிக் குஞ்சுகளைப் படைத்து மனமெனும் காட்டில் மண்டிக் கிடக்கும் கவலைகளை, வெந்து தணிய வைக்கும் திறன் பெற்ற கவிஞனாக மனிதக் கவலைகள் மறக்கின்றான்; மாய்க்கின்றான்! ஆணிடன் ஆண் என்பதை விடப் பெண்ணிடம் ஆண் என்றால் பயன் கிடைக்கும் என்பது போல் மனதைப் பெண்ணாக்கியும் நெஞ்சோடு கிளத்தல் செய்யும்கவலைகள் கண்டு அஞ்சாத நெஞ் சமும், புறம் காணும் வகையில், அவற்றால் நலியாத பற்றற்றநிலையும், தன்னிலிருந்து தான் விடுதலை விரும்பியும் இறையருளை இடையறாது வேண்டி நிற்கும் கவலை மனிதன், கவிஞனாய்க் கவலைகள் மறந்து பறக்கக் கவிதைகள் படைத்துள்ளான் என்று கூறுவதில் மிகையேதுமில்லை அல்லவா?



நிலாந்தி சசிகுமார்

# காமம்

எங்கோ ஒட்டிக் கொண்டிருந்த
ஒரு துளி உணர்வை தட்டி எழுப்பி
காதலை வார்த்தையில் பூசி
சிலிர்ப்புகளும் சிணுங்கல்களும்
போலியாய்ப் போக
எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகாமல்
காப்பாற்றி விட்டேன்
அவன் ஆசையை..


# பகிர்வுகள்

புதிர்களின் காட்டில்
நீயும் நானும்
நம்மை இணைத்துக் கொண்டு ஓடும்
ஆற்று வெள்ளம்
எதைக் கரைத்துக் கொண்டு ஓடுகிறது
பரிதவிப்புக்களை உணராத
அவசரங்களில்
பதிவுகளும் பகிர்வுகளும்

ச. இராஜ்குமார்

காயத்திற்க்கு காயம் மருந்தென்றால்
இன்னும் எத்தனை காயங்கள்
தருவாயோ நீ..
இறைவா..!!!!

எவ்வித சலசலப்பும் இல்லை
ஆற்றில் விழுந்த
இலைக்கு
சலசலப்புகள்
எல்லாம் அந்த ஆற்றுக்கே..!!!!!



# அதியன்

"அதியா நீ குல்பி ஐஸ் வாங்கலயா..?"

கேட்டுக் கொண்டே அதியனை முந்திக் கொண்டு ஓடிய அவன் நண்பன் ராகுல், இரண்டு கையிலும் ஒவ்வொரு குல்பியைப் பற்றிக் கொண்டு வந்தான். வர வரவே வாயும் கையும் இடம் மாறின.

"இல்ல ராகுல்.. நான் காசு சேர்த்து வெச்சு லவ் பேர்ட்ஸ் வாங்க போறேன்..."

"அது எதுக்குடா.." என்பது போல பார்த்த ராகுல்..." ஏன்டா...!"என்றான். ஐஸ் சுவை நடுவே வார்த்தை வழுக்கியது

"எங்கப்பா சொல்லிருக்காருடா.. இந்த பறவைங்க..குருவிங்க.. கிளிங்க எல்லாம்..

பார்க்க அவ்ளோ அழகா இருக்குமாம்.. அத காட்டுக்குள்ள எங்கப்பா ஓனர் போட்டோ புடிக்க போகும் போது எங்கப்பா தான கார் ஓட்டுவாரு..அப்போ நடக்கறதெல்லாம் எங்கப்பா சொல்வாருல்ல.. அதான்.. எனக்கும் ஆசை ஆகிடுச்சு.." - கண்களில் சிறுகு முளைக்க சொன்னான் அதியன்.

"அப்போ இனி பானி பூரி சாப்பிடவெல்லாம் வர மாட்டியா...?" என்ற ராகுலுக்கு திடும்மென வந்து அப்பிக் கொண்டது சோகம்.

"இல்லடா... இனிகொஞ்ச நாளைக்கு எதும் சாப்பிட வர மாட்டேன்.. இந்த லவ் பேர்ட்ஸ் எல்லாம் அப்டியே பஞ்சு பஞ்சுன்னு இருக்குமாம்..பாக்கவே அவளோ அழகா இருக்குமாம்.. அதான் வாங்கிடலான்னு முடிவு பண்ணிட்டேன் "

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அவனையே பார்த்தான் ராகுல்.

"நான் கேட்டு வெச்சிட்டேன்.. இன்னும் ஒரு மாசம் காசு சேர்த்திட்டா நாலு லவ் பேர்ட்ஸ் வாங்கிருவேன்டா... வேணும்னா நீயும் காசு சேர்த்து வை.. ரெண்டு பெரும் வாங்கலாம்..." என்ற அதியனை ராகுல் பதிலற்று பார்த்தான்.

இரண்டே நாட்களில் அதியன் பேசிய பறவை பேச்சு ராகுலை மாற்றி விட்டிருந்தது. அவனும் காசு சேர்த்த ஆரம்பித்திருந்தான்.

என்ன தான் ஆச்சு இந்த வீதி பசங்க புள்ளைங்களுக்கு... விஷயம் சிறகடித்து பறந்தது. இந்த மாதிரி..இந்த மாதிரி... என்று வீதி பசங்க புள்ளைங்க எல்லாரும் காசு சேர்த்த ஆரம்பித்து விட்டார்கள். ஒருத்தனும் ஒருத்தியும் பானி பூரி சாப்பிட போவதில்லை. சோன் பப்புடி வாங்கி சாப்பிடுவதில்லை. குச்சி ஐஸ் வாங்குவதில்லை. சோறுண்டு உண்டியலுண்டு என்று ஆளாளுக்கு ஒரு உண்டியலை கையில் வைத்துக் கொண்டு திரிகிறார்கள்.

ஏழெட்டு பேர் சேர்ந்த கூட்டத்தில் ஒரு குட்டித் தலைவனாகி இருந்தான் அதியன்.

"உனக்கு எவ்ளோ சேர்ந்திருக்கு.. உனக்கு எவ்ளோ.." என்று ஆளாளுக்கு அவரவர் உண்டியலை கணக்கு போடும் அதே நேரத்தில் பறவைகளின் சிறகசைப்பு... அதன் பேச்சு.. அதன் பழக்க வழக்கம் என்று நிறைய கற்றிருந்தான் அதியன். எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டான்.

"பறவை இனம் இல்லனா காடு இல்ல. காடு இல்லனா மனுஷன் இல்லன்னு எங்கப்பா சொல்வார்டா.."

"அப்டியே கையில தூக்குனா பொங்கு பொங்குனு இருக்குமாமாம்..."

"பேர் வெச்சு கூப்ட்டா திரும்பி பார்க்குமாமா.."

எல்லாரும் சிறகு பொருத்தி திரிந்தார்கள். உண்டியல் நிறைய ஆரம்பித்தது. எல்லாரும்.. சனிக்கிழமைக்கு காத்திருந்தார்கள்.

அதியன் தலைமையில் பார்த்து வைத்திருந்த லவ் பேர்ட்ஸ் கடைக்கு படை எடுத்தார்கள்.

முதலில் அதியன் காசைக் கொடுத்து இரண்டு ஜோடி லவ் பேர்ட்ஸ் வாங்கினான். அடுத்து ராகுல் வாங்கினான். அடுத்தடுத்து... மற்றவர்கள் வாங்கினார்கள். கடைக்காரருக்கு முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

கிட்டத்தட்ட கடையில் இருந்த ஜோடிப்பறவைகள் எல்லாம் காலி. வீதிக்கு வந்தார்கள். அவரவர் வீட்டு வாசலில் நின்றார்கள். பேர் வைத்தார்கள். பேசிக் கொண்டார்கள்.

"என்னுது கலர் பாரு.. உன்னுது... தலை பெருசா இருக்கு.. எப்டி பாக்குது பாரு.." என்று கயமுய கயமுய என்று பேச்சு சத்தம் போய்க் கொண்டிருக்கையில் யாரும் எதிர் பார்க்காத அந்த காரியத்தை அதியன் செய்தான். எல்லாரும் திடுக்கிட்டு பார்த்தார்கள்.

அவன் கூண்டைத் திறந்து பறவைகளை பறக்க விட்டுக் கொண்டிருந்தான்.

"டே..ய் அதியா.. என்னடா பண்ற... வளக்க தான வாங்குன.. இப்டி வெளிய பறக்க விடற..!!!!!" ராகுல் கத்தினான். எல்லாரும் கண்கள் விரிய பார்த்தார்கள்.

"ஆமா ராகுல்.. வளக்க தான்.. ஆனா வீட்டுக்குள்ள இல்ல.. காட்டுக்குள்ள.." என்றான் சிரித்துக் கொண்டே அதியன். நான்கு பறவைகளும் அவன் கையை விட்டு வெளியில் பறந்து விட்டிருந்தன. "என்னடா பன்றான்" என்பது போல எல்லாரும் பார்த்தார்கள். அவனே தொடர்ந்தான்.

"நம்மள கூண்டுல அடைச்சா நமக்கு எப்படி இருக்கும்.. அப்டிதான அதுக்கும் இருக்கும்.. அதான்.. பிளான் பண்ணி வாங்கி பறக்க விட்டேன்.." என்றவன் முகத்தில் சந்தோசம் சிறகடித்தது. இதை பார்த்துக் கொண்டிருந்த பெருசுகள் அதியனைப் பாராட்டி பேசினார்கள். அதை பார்த்துக் கொண்டிருந்த ராகுல் தனக்கும் பாராட்டு வேண்டும் என்று யோசித்து அவனும் பறக்க விட்டான். ராகுலையும் பாராட்டியது பெருசு கூட்டம்.

அடுத்த சில நொடிகளில் ஆங்காங்கே சிறகு முளைத்தது போல வானம் நிறைய பறவைகள். எல்லாரும் ஓவென கத்த அந்த வீதியே சந்தோஷத்தில் ஜொலித்தது.

நாலாவது படிக்கற அதியனுக்கு இவ்ளோ அறிவான்னு யோசிக்கறத விட நாமும் அதை பண்ணினா நல்லா இருக்கும்ன்னு தோணுச்சுனா அது தான் இந்த கதையோட வெற்றி...

அம்பலவன் புவனேந்திரன்..

# மௌனிக்கும் நியாயங்கள்..

கருச்சுமந்த உதரங்கள் கனலெனவே நிதம் எரியும்
காலங்கள் கரைந்திடினும் காத்திருப்புகள் தொடரும்
உருவப்படங்களைச் சுமந்தபடி ஊர்வலங்கள் நீழும்
உண்ணாநோன்புப் பேராட்டம் உறுதியோடு நிகழும்.

உருகுகின்ற நெஞ்சங்கள் உண்மைதேடி அலையும்
உதவுகின்ற அமைப்புகளும் உறுதிமொழி வழங்கும்
பெருகுகின்ற போராட்டம் பிடிப்பினையே அளிக்கும்
பேச்சுக்களும் உறுதிகளுக்கும் பலனென்று கிடைக்கும்..?

முருகனையும் முகுந்தனையும் முப்பொழுதும் துதிக்கும்
முகிழ்கின்ற மலர்களெல்லாம் முழுநம்பிக்கை கொடுக்கும்
தெருவில் தொடங்கி உறவுகளின் தேடுதல்கள் நிகழும்
தேசமெல்லாம் தாண்டியும் தினவுடனென்றுதொடரும்..?

சருகெனவே உதிர்ந்திடாது சத்தியங்கள் நிலைக்கும்
சாத்தியங்கள் சத்துருக்கொண்டான் சம்பவத்தை நினைக்கும்
செருகிவைத்த முடிச்சுகளாகச் சிதறிடாமலே இருக்கும்
செம்மணியின் நினைவேந்தல் செய்திகளாயென்று செப்பும்..?

குருமாரும் கட்சிகளும் குழப்பங்களையே நிகழ்த்தும்
கூடியிருக்கும் தமிழ் அமைப்புகள் குரல்வற்றியே இருக்கும்
வருமானம் ஒன்றையேயரசு வளைத்துக்கொள்ள நினைக்கும்
வன்னியில் வதைத்தஇனம் வாடித்துடித்தேன் இருக்கும்..?

நெருடல்களாய் நீடிக்கும் நினைவலைகள் பெருகும்
நித்திலமும் இப்படியோர் நிதர்தனத்தை இனிஎழுதும்
கருகிப்போன எல்லாமே கண்ணில்காட்சிகளாய்ப் படரும்
காணாமற்போனவர் கதைகள் என்றுதான் துலங்கும்..?

திருமதி தேவிகா குலசேகரன்

# மனமும் நானும்

புத்தனுக்கே அடங்காத மனமே!
இந்தப் பித்தனுக்கா நீ அடங்குவாய்?
கூடவே பிறந்த வியாதியே - எனது
ஏச்சுக்கா நீ குணம் காண்பாய்?

உலகாண்டான் மன்னன் அலெக்சாண்டர்
விண் மீது ஏறினர் ரைட் சகோதரர்
ஆழ்கடல் முக்குளித்தனர் மாந்தர் - ஆனால்
உன்னை வென்றவர் உளரோ?

வாழ்க்கை என்பதோர் திகடச்சக்கரம்
சில நாள் இன்பம் பலநாள் துன்பம்
இன்றிருப்போர்நாளை இல்லை
என்பதை எல்லாம் அறிந்தும் நீ
துயர்வரின் தூற்றுகிறாய்
மகிழ்ச்சியை மட்டும் ஏலுகிறாய்




குடிகார மனமே இன்பமெனும்
விடம் தேடி துரத்துவதேன்?
உன் ஆசை பேண நீ
பேயாய் அலைவதேன்?
எல்லாம் உன் இச்சை போல
நடக்கவேண்டும் என்றெதிர் பார்ப்பதேன்?

பிறவிக்கடன் தீர அவரவர் பிறப்பு
உன்சொல் கேளாவிடின் உனக்கென்ன இழப்பு?
யாரையும் மாற்ற நீ நினைக்காதே
முடிந்தால் நீ உன்னை மாற்றிக்கொள்!
பக்குவப்படும மனமே! நீ தெளிந்துவிடு!
பிள்ளையாய்ப் பேதலிக்கும்
உன் ஆன்மாவை திறந்து விடு!

சந்திரா மனோகரன்

# மறுக்கப்பட்டவன்

*வெயிலில் உருகி மழையில் குளித்து*
*வெடவெடக்கும் குளிரில் காத்துக் கிடந்தகாதல்*
*பழகி நடந்த புல் தரையில்*
*பனியென உறைந்து கிடக்கிறது*
*அடர்ந்த வெளியில் உடைந்த சருகு போல்*
*பகிர்தல்கள் மட்டும் மிஞ்சி என்ன பயன்?*
*பட்சிகள் சிறகடித்த பர்வதம் பற்றியெரிகிறது*
*பொலிவழிந்து நிறமிழந்த புவிபோல்*
*சிறு துணுக்கு மட்டும் விழிகளில் திரையிடுகிறது*
*'நீதான் அந்த மலையின் தலைவி'*
*அவன் வீசிய சொற்களில் சிறுநகை உடைகிறது*
*ஆகா! நிராகரிப்பின் திமிர்!*
*சபித்தவளை இனி புகழலாமா?*
*பழம் மனசையுருவி அவள்*
*நிழலில் புதைத்தாயிற்று*
*வறண்டு.. வெளுத்து.. ரசனையற்றுப்போன*
*புழைக்கடைக் காதல் என்னைக் கோமாளியாக்க*
*இராப்பகல் பாராது திறந்துகிடந்த என் செவிகளில்*
*சில்லுசில்லாய் நொறுங்கும் பேரொலி*
*விடியலில் ஆதவன் திரண்டான்*
*அவள் மூச்சும், வாசனையும் புல்லரித்த மலை*
*சுவரோவியம்போல் அங்கேயே..*
*காலம் என்னை கவனமாய் எச்சரிக்கிறது*
*அருமை நண்பா, நான் சொல்லட்டுமா..*
*கடந்து போனவைக்காகக் காத்திருக்காதே!*
*கரையற்றவனில்லை நீ*
*அங்கே வேறொரு அலை புரளுகிறதே*
*அதை நீ பார்க்கவில்லையா?*





செ. சிந்து, கோயம்பத்தூர்

# காதல்

விழிகளுக்கு விளங்கிடும்
கண்கள் சொல்கின்ற
கவிதை
என் காதல்
கேள்விகுறியென்று..!!

❍

# சுதந்திரம்

யார் கொடுப்பது
யாருக்கு தரப்படுகிறது
பெண்ணுக்கு
ஆண் கொடுப்பதா இல்லை
அவளை உணர வைப்பது தான்
சுதந்திரம்!!

❍

# நட்பு

ஆண் பெண் இனவேறுபாடுகள்
கழிந்ததேநட்பு
நட்பு பலமுறை பூக்களாம்
ஆனால் ஒரு முறை கூட
உதிர கூடாது!!!

❍

முனைவர் சா சம்பத்

# தேவதைகள்..!?

உடைந்து போன
திருகாணிக்கு பதிலாய்...?
குச்சியை சொருகும்..
பக்குவம்..!

கிழிந்த ஆடையை..
குண்டூசியை வைத்தே
மானம் மறைக்கும்
மகிமை...!?


இருக்கும் கொஞ்சம் மாவில்..
இரண்டு தோசைகள் வார்த்து
எனக்கு தந்துவிட்டு...
தனக்கு பசியில்லை என பொய் சொல்லி..
பட்டினியாய் படுப்பவள்..!?



தையல் வேலையை
பக்கத்து வீட்டு மாமியிடம் கற்று..
அவளிடமே
வேலை பார்த்து..?
கிடைத்த பணத்தை
யாருக்கும் தெரியாமல்..
என் சட்டை பையில் வைக்கும் முதிர்ச்சி..

எந்த நிலையில் நான் வீடு வந்தாலும்..?
உள்ளச் சிரிப்போடு
எனை எதிர் கொள்ளும் என் மகள்..!?

ஏழைக்கு பிறந்த
மகள்கள்..!
எல்லா அப்பனுக்கும்
தேவதைகளே...!?



பி.கார்த்திக்குமார்

# ஆர்.கே. குடோன்

“எல்லாரும் டி எடுத்துகோங்க ...........”

“அப்னே சாயா லே லோ .... பிர் காம் கற்..” (டி குடித்துவிட்டு வேலையை பாருங்கள்)

நாற்பதை கடந்திருந்தாலும் உதடுகளில் பூசிய சாயமும், கட்டியிருக்கும் பூடவையின் தோரணையும்ஆஷாவின் குரலோடு சேர்த்து அனைவரது கவனத்தையும்ஈர்த்தது.

பூஜாவி ன் பார்வையில் பயம் கனத்திருந்தது எதோ பறிகொடுத்தவள் போல தேனீர் கோப்பையை எடுத்தாள்.

அது மசாலா பொருட்களை பொட்டலம்கட்டும்‘ஆர்.கே. குடோன் ‘

மும்பையில் உள்ள‘டிகுஜினிவாடி’ என்ற இடத்தை தலைமையாகக்கொண்டு செயல்பட்டு வந்தது. இங்கு பத்துபேர்மட்டுமே வேலைக்கு அமர்த்தப்பட்டு இருந்தார்கள்.

அதில் ஐந்து பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள்.

“என்ன பூஜா, சேர்ந்த மொதல் நாளே இப்படி பயந்தா எப்படி ... சீக்கிரம் டீயை குடிச்சிட்டு வேலைய பாரு” என்றாள் தன் மெல்லிய குரலில் பூமிகா.

அப்பாவை சிறுவயதில் இழந்த பூஜா, அம்மாவின் நிழலில் பயணப்பட்டிருந்தாள், ஆனால் இப்பொது இவள் குடை தேவைப்பட்டது. வேலை தேடி அலைந்தும் கிடைத்த வேலையில் போதிய ஊதியம் கிடைக்காததாலும், அவள் தோழி ஒருவருடைய யோசனையில் மும்பை ரயில் ஏறியிருக்கிறாள் ரயிலில் ஆஷாவின் நட்பால் இங்கு பணியமர்த்தப்படுகிறாள்.

இந்த கிடங்கு சுமார் ஐம்பதாயிரம் சதுரடியை கொண்டதாக அமைந்திருந்தது. நகரத்தைவிட்டு சற்று தொலைவில் இருந்தது, இந்த கிடங்கு ஆஷா என்ற ஒற்றை நபரால்இயங்கியது. மதியம் ஆகியிருந்த வேளையில் அனைவரும் உணவு அருந்த புறப்பட்டார்கள்.

“பூமிகா எனக்கு என்னமோ இங்க வேலை செய்ய பயமா இருக்குதெரியாம இங்க வந்திட்டமோன்னு தோணுது ..”

“ம்ம்.. நான் இங்க வந்து ரெண்டு வருஷம் ஆகுது இன்னைக்கு வரைக்கும் என் பணம் மட்டும் தான் ஊருக்குபோகுதுஎன்னை இங்கிருந்து அனுப்ப மாட்டேன்னு இந்த ஆஷா பேய் முடிவாஇருக்கு, உன்னையும் அதே மாதிரி தான் விடமாட்டாங்க.... வரதுக்கு முன்னாடி யோசிக்கணும் ....”

தட்டில் போடப்பட்ட இரண்டு சப்பாத்தியை தன் விரல்களால் கிழித்தபடி யோசித்திருந்தாள்பூஜா. கிடங்கின்பக்கவாட்டில்கட்டப்பட்ட தங்கும்அறைகளில்தான் அனைவரும் தங்க வேண்டும். இவை அனைத்தும் ஆஷாவின் கட்டுப்பாட்டில்இருந்தது. இங்கிருந்து வெளியில் ஒரு துரும்பு கூட ஆஷாவின்அனுமதியில்லாமல் நகர முடியாது. தன் படுக்கையில் தூக்கத்தை தொலைத்தவளாய் புரண்டு கொண்டிருந்தாள் பூஜா.

“நான் எப்படியாவது அந்த ஆஷா கிட்ட சொல்லி ஊருக்கு கிளம்பனும் ....

என்று நாளை சொல்லவிருப்பதைஒத்திகை பார்த்திருந்தாள். இரவு வேடிக்கை பார்த்திருந்தது.

“என்ன.... க்யா பாத் கரேகா..என்னை என்ன முட்டாள் நினைச்சய்ய ..”

“காலைல என் மூடஸ்பாயில் பண்ணாத ......”

“ஜாவோ அவுர் காம் கரோ....” (போய் வேலைய பார்)

என்று வடமொழியில் வெடித்து பொங்கினாள் ஆஷா.

வாய்திறக்க முடியாமல் மௌனத்தோட வலியையும் சுமந்து கண்கள் கண்ணீரில் பேசியது..

“நீயேன் அவகிட்ட போய் பேசறே.. அவ மனிஷியே கிடையாது.. நம்மள மாதிரி பொண்ணுங்க அடிமையாவே வாழ்ந்து அடிமையாவே சாகனும்........”

பூமிகாவின் வார்த்தைகளை தாண்டியும் அவள் எண்ணம் தன் அம்மாவை சுற்றி வந்தது. தான் மாதாமாதம் பணம் அனுப்புவதாக சொன்ன வாசகம் தன் கதை மொய்த்திருந்தது. அன்று மதியம் உணவிற்கு செல்லாமல் அங்கு மலையாய் குவிக்கப்பட்ட மசாலாவை உற்று பார்த்தவளாய் அமர்ந்திருந்தாள் பூஜா.

“என்னடி கியா கரேகா..........”என்று முதலாளித்துவ தோரணையில் கடிந்து கொண்டாள் ஆஷா.

அப்போதும் அதே போல அமர்ந்திருந்த பூஜா கன்னத்தில் பளீர் என்று ஒரு அறை விழுந்தது. திரும்பி ப்பார்க்கையில் அங்கிருந்தவர்கள் அங்கு எதுவும் நடக்காதது போல அவரவர் பணியில் தீர்க்கமாக இருந்தனர். மசாலா வாசனையும், பல வருடமாக வெள்ளை அடிக்காத சுவர்களும்,ஆங்காங்கே தரையில் இருந்த விரிசல்களும் தான் ஒரு மயான காட்டில் உருவம் அற்ற விரல்களுக்கு இடையில் நசுங்குவ்துபோல உணர்ந்தாள் பூஜா. பொழுது சாய்ந்திருந்தது

“இங்கிருக்கறவங்களுக்கு கொஞ்சம் கூட இறக்கமே இல்லையா..

ஏன் மனிதர்கள் இப்படி பணத்திற்காக ஒரு இயந்திரம் போல நடிக்கிறார்கள்

இந்த உலகமே எனக்கு வேண்டாம் நான் எங்கம்மாவோட, கிடைக்கற வேலையை செஞ்சு பொழைச்சுகிறேன் ...

வா பூமிகா நம்மோ இங்கிருந்து கிளம்பிடலாம்” என்றுதிரும்புகையில் பக்கத்தில் பூமிகாவை காணவில்லை....

பக்கத்துக்கு அறைக்கு சென்றிருப்பாள் முதலில் நாம் தப்பித்துக் கொண்டு இப்படி ஒரு அடிமைத்தனமான உலகம் இயங்குவதை வெளி உலகத்துக்கு சொல்லி மற்றவர்களை காப்பாற்றுவோம், என்று நம்பிக்கையை வரவழைத்துக்கொண்டு

அறையை விட்டு நகர்ந்தாள் பூஜா.

அந்த கிடங்கின் பின்புறத்தில் ஒரு பெரிய மதில் சுவர் இருந்தது, அதுவும் ஆஷாவின் அறையை கடந்து தான் சுவரை அடைய முடியும். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அறையை கடக்க முயற்சித்தாள். அப்போது அங்கு இரண்டு பெரிய நாய்கள் ஒரு இரையை கண்டதுபோல உமிழ் நீர் வடிய கூர்ப் பற்கள் தெறிந்தவாறு நின்றிருந்தது ஆஷாவின் பக்கபலத்தை புரிந்துகொண்டவள் தன் அடியை பின்னெடுத்து வைத்தாள் அவள் அறையின் ஒதுக்குப்புறத்தில் சாக்கடை கால்வாய் ஒன்று இரும்பு கம்பிகளால் மூடப்பட்டு இருப்பதை பார்த்தாள். அந்த கால்வாய் கிடங்கின் வெளிப்புறத்தில் முடிவதாய் அமைந்து இருந்தது.

இருட்டு அந்த இடத்தில் விகாரமாக அப்பி இருந்தது. இதை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு,அந்த சாக்கடை கம்பிகளை திறந்து கால்வாய்க்குள் நுழைந்தால். நாற்றம் குமட்டிக்கொண்டு வந்தது கண்களை இருக்க மூடிக்கொண்டு மூச்சை அடக்கிக்கொண்டு அந்த சிறியகால்வாய்க்குள்தன்னை குறுக்கிக்கொண்டு ஒரு பூனையை போல அடி எடுத்து வைத்தாள். சிறுது போராட்டத்திற்கு பிறகு ஒரு வெளியை அடைந்தாள். அங்கு இருட்டு கொஞ்சம் விலகி இருந்ததால் நிமர்ந்துநடக்க ஆரம்பித்தாள் சற்று தூரம் பயணிக்கையில் ஒரு பேரதிர்ச்சியில் உறைகிறாள். அவள் கால்களுக்கடியில் மனித எலும்புகள் உடைந்தும், உடையாமல் அந்த புல்வெளியில் சிதறியிருந்தது அங்கு தன் ஓட்டத்தை பிடிக்கிறாள்..

“என்னமா தமிழா.” என்றது ரயிலில் ஒரு குரல்.

“ஆமாங்க..” என்று ஒரு இறுக்கமான முகத்தோடு பதில் கொடுத்தாள்.

:என்ன இங்க மும்பைல........”

“டிகுஜினிவாடில ஆர். கே குடோன்ல ஒரு வேலைக்கு வந்தேன்......”

“ஆர்.கே. குடோனா ...? அது பத்துவருஷத்திற்கு முன்னாடியே ஒரு மின்சார விபத்துல எறிஞ்சுபோச்சே.அதுல வேல செஞ்ச பத்துபேரும் இறந்துட்டாங்க, ஆனா அங்கிருந்த ஒரு ஆள்மட்டும் பொழச்சுட்டாங்கனு கேள்விப்பட்டேன்.. ஆனா அவங்களும் இப்போமனநலம் பாதிக்க பட்டுட்டாங்கனும் வெளில பேசிக்கிறாங்களே..” என்றதும் பேயறைந்தது போல தன் இருக்கையில் சாய்ந்தாள் பூஜா.

“கியா கரேகா இதற்..........”

திடிரென்று உதட்டு சாயத்தை தாண்டி வெளிய தெறித்தது பழக்கமான அந்த குரல்.

❍

தக்ஷன், தஞ்சை



ஆகிவிடக்கூடும் இப்படியும்
அந்தக் கிணறு
என்றேனும் நிரம்பி வழிந்திருக்கலாம்..
அந்த வற்றிய நதி
என்றேனும் சல சலத்து ஓடியிருக்கும்

அந்த ஆற்றுப் படுகையில்
என்றேனும் ஊத்துத் தோண்டித்
தண்ணீர் ஊறியிருக்கலாம்

ப்ளாஸ்டிக் பாட்டில்
தண்ணீருக்குக் காசு கொடுத்துவிட்டு
பேருந்தின் ஜன்னலோரம் அமர்ந்து
பெய்ய ஆரம்பித்த மழையின்

முதல் துளியுடன் கடைசித் துளியையும்
பத்திரப் படுத்தினேன்
என்றேனும் மழை கூட இப்படி
என்றேனுமாய் ஆகிவிடக் கூடுமென்று!

# ஹைக்கூ கவிதைகள்

இளைப்பாறும் நாயின்
முதுகின் மேல் உறங்குகிறது
மரத்தின் நிழல்!

புல்லாங்குழல் வாசிக்கும் சிறுவன்
தலையசைத்தபடி
உறங்கும் பயணிகள்!

வெறுமனே திரும்பும் யாசகன்
கை வீசி நடக்கிறான்
பிரபஞ்சத்தை பின்னுக்குத் தள்ளி!


வினோத்

# முடிவில்ல பெரும் சித்தன்

மூத்த தமிழ் புலவன்
முடிவில்ல பெரும் சித்தன்
நோக்கம் அறிந்த அறிஞ்ஞன்
என் ஏக்கம் புரிந்தவன்
எப்போதும் என்னைக் காப்பவன்
எனக்காக என்றும் இருப்பவன்
அன்பே வடிவான ஆதியவன்
அகிலத்தை ஆளும் யோதியவன்
அணையாமல் அருளும் ஒளியானவன்
அணைக்கின்ற தாய்க்கு நிகரானவன்
அதியும் அந்தமும் இல்லாதவன்
விதியும் மதியும் வென்றானவன்
பிரபஞ்ச பொருளாய் இருக்கின்றவன்
பிரமத்தின் உயிராய் தெரிகின்றவன்
எனக்குள் இருக்கும் உயிரானவன்
அன்பாய் தெரியும் வடிவானவன்
மறைகள் கடந்த இறையானவன்
மனதில் நிறைந்த சிவனானவன்
மகிழ்ச்சி தரும் மாமருந்தவன்
மனதில் துன்பம் அறுப்பவன்
மாசற்ற மலர் சுடரவன்
பாவம் தீர்க்கும் பாவநாசம்
பதியானா பெரும் பாசம்
ஏகம் என்ற திருமந்திரம்
எப்போதும் எனக்கான தந்திரம்

ஏக்கத்தின் விடையான விளக்கம்
எரிகின்ற தீபத்தின் சூட்சுமம்
காதலாகி உருகினேன் சிவனே
காதலாலே மருகினேன் அப்பனே
ஆதலாலே தேடினேன் உன்னையே
ஆதரிப்பாய் என்றுமே என்னையே
பாடலாலே போற்றினேன் தெய்வமே
காதலாகி கசிந்து உருகுமே
கண்ணீரில் நான் செய்த அபிசேகமே
தண்ணீரில் குளிரும் என் ஈசனே
உன்னருளால் மகிழட்டும்
என் நெஞ்சமே
பாதம் பற்றினேன் உன் மகனே
விழிகள் திறப்பாய் என் பக்கமே
எனக்கருள்வாய் வினையறுப்பாய்
உன்னை பணிந்தேன் கரம் குவித்தேன்
அறு அறு தடையறு திற திற கண்திற
இரு இரு என்னுடன்
சரி வரும் நினைப்புது

சா.கா.பாரதி ராஜா
செங்கல்பட்டு



# துளிப்பாக்கள்

*நீரற்ற ஓடை*
*நத்தையின் நகர்வில்*
*ஒரு கப்பலின் பயணம்*

❍

*இறந்தும்*
*பாலூட்டும் அன்னை*
*உறக்கத்தில் உதட்டசைவு*

❍

*எவருமே இல்லையென*
*அழுதவனின் கண்ணீரைத் துடைத்தது*
*அவனது உள்ளங்கை*

*தூரல் விழ*
*இதழ் விரித்தன*
*குடைப் பூக்கள்*

❍

*பேரம்பேசி வாங்கினேன்*
*கோபத்தில்*
*காலைக் கடித்தது செருப்பு*

❍

*கடவுளை வணங்குகிறேன்*
*இதயத்தை வணங்குகிறது*
*இணையும் கைகள்* ❍

வேதா. இலங்காதிலகம்.

# ஓம்கிறீன்லாந்தா!

ஆன்மார்த்த பூசை ஆளுமையென
ஆன்றோர்களையும் ஏமாற்றும் ஆடைகளா!
ஆலவட்டமாய் சமய ஆரத்தியுடன்
ஆசை வார்த்தைகள்ஆகமமா!

அடக்கம், பண்பாடுகள் தடுக்கி
முடங்கும்வாலிப முயற்சி
முழு உலகையும்முகிழ்த்தி
முக்குளிக்கும் தவறான பாலுறவா!

சிறுவர்கள், இளையவர்களைசிதைக்க
பொறுமையாய் மூளைச்சலவையில்பொருத்தி
வறுமையற்றுப் பணம் வறுகிட
வாய்ப்பென உலகைக்குழப்புகிறாரா!

எண்ணற்ற குற்றங்களை ஒழித்திட
கண்களைக் கட்டிக்கும்மாளமா!
அனாயாசமாய் உலகை அனுபவிக்க
பனாமா, கிறீன்லாந்தெனத் தனித்தீவா!

குறளி வித்தைகளால் உலகை
அறவழியென ஆட்டும் ஆசாடபூதிகளா!
சிறந்த சுயபுத்தியைத் தீட்டுங்கள்மக்களே!
திறனுடன் சுயகாலில் வாழுங்கள்!

நவஜோதி ஜோகரட்னம்

# எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது

*அப்பாவின் சட்டைப்பையில்*
*தலை நிமிர்ந்தது அந்தப்பேனா*
*இன்று வெற்றுத்தாளில்*
*தலகுனிகிறது இந்தப்; பேனா*
*மின்னல்போல் தெறித்தது*
*ஒரு நெம்புகோல்*
*அதுவே தீர்க்கமாய்*
*உலகத்தை புரட்டியதென்று*
*உதிக்கிறது எண்ணமாய்..*

*நான் நிரம்ப ரத்தம் சிந்திவிட்டேன்*
*இனியும் என்னால்; சிவக்க*
*முடியவில்லையே*
*என்ன செய்ய?*
*ஓ.. சிவப்பு சிவப்பு என்று*
*அறை கூவியது அது தானோ!*
*இல்லை*
*நிழலைப் பார்த்தும் பயப்பிடாது*
*நகருகின்றேன்*
*எங்கோ ஒரு வெளிச்சம்*
*நிட்சயம் தோன்றும் என்று..*
*துயில் உரிந்த மரங்களுக்கு*
*பனி ஆடை உடுத்துகையில்*
*கவிதையொன்று உருவெடுத்து -*
*என்னுள்*
*ஆவியாகிப் பரவுதே!*
*இனிமையான சொற்களின்றி*
*சீறி உயிரைக்;;; கொல்லும்போது*
*பழுதுபடாக் காற்றைப்போலன்றைய*
*பேரன்பொன்றென்னைத்*
*தடவுதே!*
*ஓ..நீயா..என்*
*அன்பிற்கு உரியவரே!*
*என்முன் வந்துநீ*
*நிற்கின்றபோதெல்லாம்*
*எனக்குச் சிரிப்புத்தான் வருகின்றது..*

ந.கிருஷ்ணசிங்கம்

# தமிழரும் நாமும்..

தமிழன் இல்லாத நாடில்லை. தமிழனுக்கென்று ஓர் நாடில்லை இந்த, வரியை உச்சரிக்கும்போது, எம் உச்சிமுதல் உள்ளங்காலகள்;வரை அதிர்கின்றன. ஏன்.. ஏனிந்தநிலைமை? எண்ணிப்பாரும். எத்தனை தசாப்தமாய் இது தொடர்கின்றது.

உலகப்பரப்பில், பத்துக்கோடிக்கு மேற்பட்ட..எம் இனத்துக்கென்று, தனி முடிக்குரிய ஒரு நாடில்லாது, நாம் எங்கும்.. அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் என்ற, மனக்குறைபாட்டுக்குரிய தன்மையோடு வாழும் இனமாகப் பிறதோசமெங்கும் உயிர்வாழும் இந்தநிலையும், இந்தப் புலம்பெயர்வாழ்வில், இனமுகமிழந்துபோகும் எமது, பரம்பரையினர்ப்பற்றிய உள்ளார்ந்த கவலையும் போயொழிந்து மீழ்வதற்கு, எமது நாடு எமது கைக்கு வரவேண்டும். எமக்கொரு நாடுவேண்டும்

தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, மொரிசியஸ், மடகாஸ்கர், தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய, கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, ழிஜர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, டென்மாக், நார்வே, சுவீடன், பிஜிதீவுகள், தாய்லாந்து, இந்தோனேசியா, கம்போடியா முதலான நாடுகளில் வாழும் நம் இனத்தினர்களுக்கென்று, உரிமைக்குரிய நாடு ஒன்று, இன்னும் இல்லை.

ஒவ்வொரு இனமக்களும், தத்தமது இன அடையாளங்களான மொழி, கலை, கலாச்சாரம், ஆள்புலம், மற்றும், இனவுணர்வுத் தாயகதாகம் ஆகியன கொண்ட, மனிதர்களாக வாழ்வது இயல்பானதொன்றாகும்.

அந்தவகையிற்தான் தமிழீழ மக்களாகிய நாமும் அவற்றைக் காப்பதற்கும், வென்றெடுப்பதற்கும் ஆவல்கொண்ட ஆண்மபலமோடு, நாம் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களில் அகிம்சைவழிப் போராட்டங்களைத் தொடர்கின்றோம்.

ஒரு இனத்தின் அடையளங்கள் அழிக்கப்படும்போது, அந்த இனத்தின் ஆதிக்குடிகளும், மத சமூகங்களும், தேசிய இனங்களும், தமது இனமொழிநாடு என்ற,

பாரம்பரியத்தையும், அதனூடான பண்பாட்டைக் காக்கவும், அவற்றை மீட்கவும் போராடிவந்துள்ளனர்.

போர்த்துக்கீசியர் எமது, தாயகத்தைக் கைப்பற்றிய காலத்திலும், பின் ஒல்லாந்தரதைக் கைப்பற்றியபோதும், பிரட்டிஸ்சார் அதைப்பறித்து ஆளவந்தபோதும், எமது முடிக்குரிய மன்னர்களும், மக்களும் ஒவ்வொருமுறையும், எழுச்சிகொண்டு போராட்டங்களை நடத்தித்தான் வந்துள்ளார்கள்.

அதன் தொடர்ச்சியாகவே எம்மை இரண்டாம்தரப் பிரசைகள் என்றுகூறி, எம்மை அடக்கியொடுக்கி ஆட்சிநடத்தும் சிங்களப் பேரினவாதத்தோடும் நாம் போராடுகின்றோம்.

போர்த்துக்கீசியர் காலத்தில் எமது ஆலயங்களும், இனத்துவ அடையாளச் சின்னங்களும் இடித்தழிக்கப்பட்டதுவோ, அதையே ஒல்லாந்தரும் தொடரழிப்பாக நிகழ்த்தினார்கள். ஆங்கிலேயரோ.. எமது மொழிவழிக்கல்வியிலும், மதவழிப் பண்பாட்டிலும் மாற்றங்கள் கொண்டுவந்து, எம் தமிழினத்தின் சுயவடிவத்தைக் கட்டாயக் கவற்சிக்குள் உட்படுத்தித் தம்மேலாதிகத்துள் மிதிபட்டுவாழும் அடிமைத்துவமக்களாக்க வடிவமைத்து,.. பல்நெடுங்காலங்கள் எம்மினத்தையும், மண்ணையும் ஆண்டார்கள்.

இவையெல்லாவற்றையும்விட, இன்றைய தனிச்சிங்கள பௌளத்தப் பேரினவாத அரசானது, எமது தேசியத்தை முற்றுமுழுதாகச் சிதறடித்து, எமது சாத்வீகப் போராட்டங்களைச் சாய்த்துமுடக்கி, எமது இனத்தின் கைகளில் ஆயுதங்ளைத்திணித்து, முப்பதாண்டு காலத்திற்கு மேலாக, யுத்தத்தை இழுத்தடித்து, இலட்சக்கணக்கான எம்மவரைக் கொன்றுகுவித்து, நமது தாயகமக்களில் பாதிப்பேரை இடம்பெயரவைத்து, மீதிப்பேருக்கு ஆழுக்கொரு இராணுவரை அங்கே நிறுத்தி, இன்று, எமது தாயபூமியை ஆக்கிரமித்து, அடக்குமுறை ஆட்சியை நடத்துகின்றது.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் முதல் அதன் மொழியை அழிக்கவேண்டும்யு என்பது ஓர் நடைமுறைப் பழமொழியாகும். இதற்கமையவே, இலங்கையில் காலகலமாய் நடைபெறும் அரசுக்கள் தொடர்ச்சியாக எம் தமிழ்மொழியை ஒடுக்கியழிக்கும் தம்பணியை நிறைவேற்றிவருகின்றன.

தமிழ் உபயோகமெழிச் சட்டமொன்றைக் ஒரு காலத்தில் கொண்டுவந்தார்கள். பின் அதைக்கூடக் கைகழுவிவிட்டு, இன்று சிங்களம்மட்டும்தான் எல்லாம் என்றுகூறியே

ஆட்சிநடத்துகின்றார்கள். ஒரு தேசத்தின் பூர்வீககுடிகளான, எமது மொழிக்குரிய இடமங்கு இல்லை. 5000ஆண்டுகளுக்கு முற்பட்ட எமது மூத்தமொழியான தமிழ்மொழி இலங்கையில் அரச அந்தஸ்து அற்று அழிக்கப்படுகின்றது. ஆனால், சிங்கப்பூரில் வந்தேறுகுடிகளாக, அங்கேவசிக்கும் பத்து விழுக்காடேயுள்ள, எம் தமிழ்மக்களின் தாய் மொழியான தமிழும் ஆட்சிமொழிகளில் ஒன்றாக அந்த அரசால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, எந்தமிழ்மீழத்தின் விடுதலையின் தொலைவு இன்று, வெகுதூரம் பின்நோக்கிச் சென்றுவிட்டது.

மேகாவம்சமென்னும் பௌத்த புராணக் கோட்பாட்டுக்கமைய, இலங்கை முழுவதையும் அரசு பௌத்ததீவாக்கி வருகின்றது. உலகெலாம் பரவிவாழும் தமிழருக்கென்று ஒரு நாடாய் எமது தமிழீழ தாயகம் அமையும் என்ற கனவு கலைந்தநிலையில், புலத்துவாழ் ஈழத்தமிழர்கள் நாம், சாத்வீகவழியில் ஒன்றுபட்டு இணைந்து, போராடவேண்டிய கடமை.. கண்ணியம்.. கட்டுப்பாட்டைப் பூண்டவர்களாக இயங்கவேண்டும் என்றது, காலம் எமக்கு இட்ட கட்டளையாகும்.

இன்றைய நூற்றாண்டில்;, அரசுகளின்அடிமைத்துவ நெருக்கடிகளில் சிக்குண்ட தேசியமக்கள், தமது மீட்சிக்கான தேடுதல் முயல்வின் இறுதித்தீர்வாக, தம்மை நசுக்கும்.. ஒடுக்கித் துன்புறத்தும், அழித்துமுடிக்கும் அனியாயமான பெரும்பான்மையினங்களின் பிடியிலிருந்து வீடுபட்டு, பிரிந்துபோவதில் பெருவிருப்பங்காட்டி, உலகம்தழுவிய போராட்டங்களை முன்னெடுப்பதால், அதன் நியாப்பாட்டை எடுத்துக்கூறி, தமது தனிநாட்டுக்கான கோரிக்கைகளை ஐக்கியநாடுகளிச் சபைக்குச் சமர்ப்பிப்பதால், தமது இனத்தின் ஒன்றுபட்டகுரலை ஓங்கிஒலிக்கச் செய்வதால், அவர்களுக்குரிய பிரிந்துசெல்வதற்கான பொதுசன வாக்கெடுப்பை மேற்படி பொதுச்சபையானது நடத்துகின்றது. அந்த வாக்கெடுப்பில், அந்த அடிமைத்துவ இனங்கள் வெற்றிபெறுவதால் அவர்களின் நாடுகள் பிரித்தெடுக்கப்பட்டு தனிநாடாக அது ஐக்கியநாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப் படுகின்றது. இந்தவகையில் விடுதலைபெற்ற பல புதிய நாடுகள் உலக வரைபடத்தில் காலத்துக்குக் காலம் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

இந்தவகையில், உலக வரைபடத்தில் தமிழனுக்கென்று ஒரு தனிநாடாக எமது தமிழீழ தேசமும் இடம்பெறவேண்டுமானால்.. சகலவெம் ஈழத்துறவுகளும் ஒன்றபட்டு இதற்கான ஒரு தோற்றப்பாட்டை உலமன்றத்தில் உருவாக்கும் விதமான சாத்வீகப்போராட்டங்களைத் தொடர்ந்து, மனச்சோர்வின்றி முன்னெடுக்க முயலவேண்டும். இத்தகைய முயல்வின்மூலம், தமிழனுக்கென்றொரு நாடு நிச்சயமாக முதன்முதல் உலகில் உருவாக்கம் பெறும்.

செவல்குளம் செல்வராசு

# அடுத்த புத்தகம்

கை குலுக்குகிறார்கள் சிலர்
கட்டியணைக்கிறார்கள் சிலர்
பெருமகிழ்ச்சியடைவதாய்
கூறிக்கொண்டே
நழுவுகிறார்கள் சிலர்
நீ நண்பன் என்பதே பெருமை என
புகழ்ந்து கலைகிறார்கள் சிலர்

எவ்வளவு செலவாச்சு என
அக்கறைப் படுகிறார்கள் சிலர்
எவ்வளவு லாபம் என
கணக்கு கேட்கிறார்கள் சிலர்

எதிர்பாராவிதமாக போய்
எதிரில் நின்றதும்
வெளியீட்டு விழாவுக்கு
வர முடியாமல் போனதற்கு
வருந்துவதாய்க் கூறும்
போலி முகங்களோடு சிலர்

விலையை புரட்டிப் பார்த்து
தள்ளுபடி விலை எவ்வளவு
என கேட்கும் இன்னும் சிலர்

வெகு சிலர் மட்டும்
அச்சிடப்பட்டு இருப்பதைவிட
அதிக விலை கொடுத்து
மகிழ்கிறார்கள்

இன்னும் வெகு சிலர்
அடக்க விலையையாவது
பெற்றுக்கொள்ள வேண்டும் என
கட்டாயமாய் பையில்
திணிக்கிறார்கள்

தன் புத்தகத்தை
தானே விற்க நேர்ந்தவன்
முடிவு செய்கிறான்

இன்னும் சிலருக்காகவும்
வெகு சிலருக்குமாவது
அடுத்த புத்தகம் எழுதலாம்தான்
பிரதிகள் மட்டும்
இன்னும் குறைவாக அச்சிட
வேண்டும்